## சட்டப்பேரவை பொதுத்தேர்தல் - 2026

# தமிழ்நாடு - புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான கால அவகாசம் நீட்டிப்பு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் தமிழ்நாடு -புதுச்சேரி மாநில சட்டப் பேரவை பொதுத்தேர்தலுக்கு கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோர் 20-2-2026 முதல் 2-3-2026 வரை தலைமைக் கழகத்தில் விண்ணப்பித்திட வேண்டுமென ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து,

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான 1.3.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு மேல் விண்ணப்பம் பெறப்படும்.

மேலும் கழகத் தலைவர் அவர்களிடம் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் வேண்டுகோள் வைத்ததற்கிணங்க, **6-3-2026, வெள்ளிக்கிழமை, மாலை 5.00 மணி** வரையில் கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது.

தமிழ்நாடு - புதுச்சேரி மாநில சட்டப்பேரவை தொகுதிக்கான விண்ணப்பக் கட்டணம் :

| | |
|---|---|
| **பொதுத் தொகுதி** | **ரூ.25,000/-** |
| **மகளிர்க்கும் மற்றும் தனித் தொகுதிக்கும்** | **ரூ.15,000/-** |

குறிப்பு : விண்ணப்பபடிவம் தலைமைக் கழகத்தில் ரூ..1,000/- வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

மதுரை தெற்கு மாவட்டம்

## மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை தெற்கு மாவட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதாலும் - பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கொம்பாடி கு.தங்கம் மறைவெய்திய காரணத்தாலும்; தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.முத்துராமன் அவர்கள் செல்லம்பட்டி தெற்கு ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து வருவதால், அவர் வகித்து வந்த தலைமைச்செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் - ஏர்போர்ட் ஆர்.பாண்டியன் தான் வகித்து வந்த தலைமைச்செயற்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தினாலும்; மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது), பொருளாளர், மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் (இருவர்) ஆகிய பொறுப்புக்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 28 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை தெற்கு மாவட்டம், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) பொறுப்புக்கு பி.எஸ்.ஆர்.பாண்டியன், மாவட்டப் பொருளாளர் பொறுப்புக்கு மு.சி.சோ.சி.நிரஞ்சன் மற்றும் இரண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புகளுக்கு ஆர்.எஸ்.டி.பாண்டியன், வீ. ஜெயராஜ் ஆகியோர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**மதுரை தெற்கு மாவட்டம்,**
**மாவட்ட துணைச் செயலாளராக(பொது)**

**திரு. பி.எஸ்.ஆர்.பாண்டியன்,** 2/196, ஏர்போர்ட் மெயின் ரோடு, பெருங்குடி, மதுரை - 625 022 அவர்களும்;

**மாவட்ட பொருளாளராக திரு. மு.சி.சோ.சி. நிரஞ்சன்.** 51, சோணை மீனா நகர், திருமங்கலம், மதுரை-625 706ம் அவர்களும்;

**தலைமைச் செயற்குழு உறுப்பினராக திரு. ஆர்.எஸ்.டி.பாண்டியன்.** ஆர்எஸ்டி இல்லம், கோபாலபுரம், எழுமலை அஞ்சல், பேரையூர் தாலுக்கா, மதுரை மாவட்டம் அவர்களும்;

**தலைமைச் செயற்குழு உறுப்பினராக திரு. வீ. ஜெயராஜ்,** 1/81, கிழக்கு தெரு, பன்னிக்குண்டு, திருமங்கலம்,

மதுரை-625706 **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

புதுச்சேரி-காரைக்கால் மாநிலம்

## பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் புதுச்சேரி-காரைக்கால் மாநிலத்தில் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.டி.வி. (எ)சங்கர் மறைவெய்திய காரணத்தால், புதுச்சேரி-காரைக்கால் மாநிலம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 28 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."" என்று தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுச்சேரி-காரைக்கால் மாநிலம், மாநிலப் பொருளாளர் பொறுப்புக்கு அமுதா ஆர்.ஆறுமுகம் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**புதுச்சேரி – காரைக்கால் மாநிலம், மாநிலப் பொருளாளராக, திரு. அமுதா ஆர்.ஆறுமுகம்,** 19, மரியம் அவென்யூ, திருநள்ளார் ரோடு, காரைக்கால் - 609 602 **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 28.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா ஏற்பாட்டில் கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 1073 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

### க.தனசேகரன் எம்.சி., கே.கண்ணன் எம்.சி., மு.ராசா எம்.சி., காசி முத்துமாணிக்கம் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 01

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, இன்று (01.03.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணிக்கு, ராஜீவ் காந்தி நகர், நெசப்பாக்கத்தில் 1073 நபர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

இந்நிகழ்வில் கணக்கு நிலை குழு தலைவர் க.தனசேகரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா, மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், பி.எஸ்.முருகேசன், வட்டக் கழகச் செயலாளர்கள் பி.கே.குமார், பொன்.வர.லோகு , பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், அ.கதிரேசன், சதீஷ் கண்ணன், செந்தில் குமார், ஐம்புமுருகன், எஸ்.மைக்கேல், மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா, பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு, மாவட்ட அமைப்பாளர் சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா, சையத், பகுதி கழக நிர்வாகிகள் உமாபதி, அஜந்தா ரவி, தியாகு, பாபு கமலக்கண்ணன், வாட்டர் விஜி, நாகராஜன், விஜயலட்சுமி, ராஜித்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அசோக்குமார், பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ், ந.மணிகண்டன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

---

## சுடரெழும் தூயவொளிச் சூரியனாய்த் துலங்குகவே!



பெண்களே எல்லோரும்
பெருந்திரளாய் வாருங்கள்!
தண்ணீர்பாய் காவிரிபோல்
தளிர்க்கைகள் சேருங்கள்!
கண்களாய்ப் பெண்களைக்
கருதுகின்ற
தளபதியின் பண்ணார்ந்த
பிறந்தநாள்
பன்னூறு வருகவென
வண்ணவண்ண மலர்தூவி
வாழ்த்துகள் கூறுங்கள்!

இல்லத்தின் அரசியரே,
இனிமையுடன் வாருங்கள்,
இல்லாமை தீர்ந்ததென
இன்பமாய்ச் சேருங்கள்!
செல்வத்தின் அன்னையராய்த்
திகழவைக்கும் தளபதியின்
நல்லதொரு பிறந்தநாள்
நானிலம் வளர்கவென
மல்லிகை முல்லையுடன்
வானொலிக்க வாழ்த்துங்கள்!

சிறுமியரே, சிறுவரே,
சேர்ந்தணியாய் வாருங்கள்,
குறுகுறு நுரையலைபோல்
குதித்தாடிச் சேருங்கள்,
அறுவகைச் சுவையுணவை
அளிக்கின்ற தளபதியின்
உறுகின்ற பிறந்தநாள்
ஒருநூறு வருகவென
விறுவிறு எனக்கூடி
விழைந்துள்ளம் வாழ்த்துங்கள்!

கல்லூரி பயில்கின்ற
காளையரே வாருங்கள்,
பல்லாறு கலந்திங்கே
பாய்தல்போல் சேருங்கள்,
நல்லாறு நீர்செல்ல நல்குகின்ற
தளபதியின் வெல்லவரும் பிறந்தநாள்
விரிகவே நூறென்று
வல்லார்ந்த தோளுயர்த்தி
வானதிர வாழ்த்துங்கள்!

கற்கின்ற மாணவக்
கண்மணிகாள் வாருங்கள்,
சொற்குவியல் போலவே
தொடர்ந்திங்குச் சேருங்கள்,
பொற்பாக நீர்பொலியப்
பொழிகின்ற தளபதியின்
வெற்றிதரும் பிறந்தநாள்
விளைகவே நூறென்று
கற்றைமுடி குலுங்கவே
கைகூப்பி வாழ்த்துங்கள்!

மதிமிகு மாணவிய
மாணவரே வாருங்கள்,
புதியதோர் உலகெழுப்பப்
புறப்பாட்டாய்ச் சேருங்கள்!
அதிநுட்பக் கணியங்கள்
அளித்துமகிழ் தளபதியின்
விதிமாற்றும் பிறந்தநாள்
விழைகவே நூறாக
உதித்தெழும் சூரியன்போல்
ஒளிவாழ்த்துக் கூறுங்கள்!

அரசிலே பணியாற்றும்
அலுவலரே வாருங்கள்,
முரசொலித்து ஓரணியில்
முழங்கியே சேருங்கள்!
பரிசளித்துப் பயன்செய்து
பாராட்டும்
தளபதியின்

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

உரிமைமிகு பிறந்தநாள்
ஒருநூறாய் உயர்கவெனப்
பரிவோடு திரண்டெழுந்து
பல்லாண்டு கூறுங்கள்!

அறிவூட்டித் தொண்டாற்றும்
ஆசிரியர் வாருங்கள்!
செறிவூட்டும் எண்ணம்போல்
செம்மையாய்ச் சேருங்கள்!
குறைதீர ஊதியக்
கொடைநல்கும் தளபதியின்
பிறையான பிறந்தநாள்
பெரிதாக வளர்கவென
நிறைவாக மகிழ்ந்திங்கே
நெஞ்சினிக்க வாழ்த்துங்கள்!

உழுதுழுது உலகூட்டும்
உழவர்களே வாருங்கள்,
வழிந்தோடும் ஆற்றுநீர்
வண்ணமாய்ச் சேருங்கள்!
இழிந்தநிலை போகவே
ஈத்துவக்கும் தளபதியின்
எழுச்சிமிகு பிறந்தநாள்
இனியுமொரு நூறாகச்
செழித்தநெல் கரும்புவாழை
தெங்களித்து வாழ்த்துங்கள்!

தொழிலாளத் தோழர்களே,
துடிப்புடன் வாருங்கள்!
பொழிகின்ற வேர்வையுடன்
பூரித்துச் சேருங்கள்!
வழிகின்ற துயர்துடைத்து
வழங்குகின்ற தளபதியின்
விழிப்பூட்டும் பிறந்தநாள்
வேண்டுமொரு
நூறென
எழுச்சியுற உணர்ச்சிமிக
இலக்கோடு வாழ்த்துங்கள்!

தமிழுக்குத் தொண்டாற்றும்
தகைமையரே வாருங்கள்!
அமிழ்தான சொல்லடுக்காய்
ஆன்றோரே சேருங்கள்!
நிமிர்ந்திடநீர், விருதுகளை
நிறைந்தளிக்கும்
தளபதியின்
இமயமுயர் பிறந்தநாள்
இன்னுமொரு நூறாகக்
கமழினிய கவிதைகளால்
கனிந்தவரை வாழ்த்துங்கள்!

முதியோரே, இளமைநலம்
முகிழ்த்திங்கே வாருங்கள்;
நதிநீர்போல் ஒன்றாகி நாற்றிசையும்
சேருங்கள்!
மதித்துங்கள் நலம்நாடி
மகிழ்விக்கும் தளபதியின்
நிதியான பிறந்தநாள்
நீள்கவே நூறுபல
துதிக்குமவர் தலைதொட்டுச்
சுரந்தன்பில் வாழ்த்துங்கள்!

பிறமொழி பேசுவோரே,
பெருகியே வாருங்கள்,
நிறம்சாதி கருதாமல்
நெருங்கிய சேருங்கள்!
உறவாக இடமளித்து
உதவுகிற தளபதியின்
அறமான பிறந்தநாள்
ஆண்டுநூறு ஆகுகென
விறலறிந்து திரண்டுநீர்
வெற்றிபெற வாழ்த்துங்கள்!

என்னென்று தெரியாமல்
எதிர்ப்போரே வாருங்கள்!
மின்னல்போல் அறிவொளிதான்
மேவிடச் சேருங்கள்!
கன்னலென உங்களுடன்
கைகோக்கும் தளபதியின்
தன்மானப் பிறந்தநாள்
தழைகவே நூறாகப்
பன்மலர் சூட்டியே
பகைபோக வாழ்த்துங்கள்!

மக்களே உங்களுக்கு
மணிமுடி தரிக்காத
தக்கதொரு முதல்வராய்த்
தலைவராய்த் தளபதியாய்
மிக்கபேர் ஆற்றலுடன்
மேதினியின் போற்றலுடன்
சுக்கானை இயக்குகின்ற
சூழ்திறன் கொண்டவர்
சிக்கலுக்கு எளிதாகத்
தீர்வுகள் காண்பவர்,
எஃகாக இருப்பவர்
எதிர்ப்பதில் இரும்பவர்;
எக்காலும் வடபுலத்து
ஏகாதி பத்தியத்தில்
சிக்காமல் எதிர்க்கின்ற
சிண்டுபிடித் தாட்டுகின்ற
முக்கோணத் திமுக
முழுதாக வெற்றிபெற
இக்காலம் தளபதிக்கு
இயம்புவோம் பிறந்தநாள்
சக்கரம் சுற்றுமெனச்
சாற்றுவோம் வாழ்த்துகள்!

தாயருள் சிறந்தவர்
தயாளம்மாள் கலைஞரின்
சேயாகப் பிறந்தவர்
சிறைக்கஞ்சா தெழுந்தவர்
தீயாக வளர்ந்தவர்
திராவிடம் கிளர்ந்தவர்
ஓயாத காற்றவர்
உறங்காத ஆற்றலர்
தேயாத நிலவவர்,
செங்கதிராய் உலவுபவர்
வேயாத வானமவர்,
விசையூட்டும் கானமவர்!
சாயாத மானவர்
சால்பாக ஆள்பவர்!

காயாது காய்ந்திட்ட
கருஞ்சட்டைப் பெரியாரும்
வயது வாய்த்திட்ட
வரமான அண்ணாவும்
மூவாது வாழ்கின்ற
முத்தமிழ்க் கலைஞருடன்
தீயாது பேசுகின்ற
தெள்ளியபே ராசிரியர்
காவாது காத்திருக்கும்
கழகத்தின் தலைவர்க்குப்
பூவாகப் பூத்திருக்கும்
புதியதொரு பிறந்தநாள்
பாவாகப் புனைந்துபல
பல்லாண்டு வாழ்கவென
நாவாரப் பாடுவோம்,
நலமோங்க வாழ்த்துவோம்!

கடலாகப் பரந்துள்ள
கழகத்தின் தொண்டர்களை
உடன்பிறப்பாய்க் கருதியே
உள்ளத்தால் தழுவுகிற
நடமாடும் கலைஞராய்
நம்அண்ணா பெரியாராய்த்
திடமாகச் செயலாற்றும்
திராவிடப் புகழ்பாடும்
உடன்படாத தில்லியிடம்
உரிமைக்குப் போராடும்
தடம்மாறாத் தளபதி
தண்டமிழ்க் குலபதி
புடம்போட்ட பொன்னாகப்
பொலிவுறும் பிறந்தநாள்
சுடரெழும் தூயவொளிச்
சூரியனாய்த்
துலங்குகவே!
இடர்களைத் தாண்டியே
எதிர்ப்போரை வென்றிங்கே
தொடரட்டும் ஸ்டாலினே!
துலங்கட்டும் தமிழ்நாடே!

---

## சு.மனோகர் தலைமையில் முதல்வர் பிறந்த நாள்!

# 78வது வட்டத்தில் கழகக் கொடி ஏற்றி உணவு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்குகிறார்!

சென்னை மார்ச்,1-

சென்னை கிழக்கு மாவட்டம்,78வது வட்டத்தில், தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (1.03.2026) (ஞாயிற்றுக்கிழமை) காலை 11மணியளவில் அண்ணா சிலை தாணா தெரு, புரசைவாக்கத்தில் 78வது வட்ட செயலாளர், சு.மனோகர் தலைமையில், எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனகுழு உறுப்பினர், சொ.வேலு முன்னிலையில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், பெருநகர சென்னை வளர்ச்சி குழும தலைவர், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் மதிய உணவாக பிரியாணி வழங்குகிறார்.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

---

### மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - எழிலன் நாகநாதன் - வினோத் வேலாயுதம் - சைதை சாதிக் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 (அ) வட்டத்தில் கழக கொடி ஏற்றி இனிப்பு!

### வட்ட செயலாளர் மு.மோகன் அறிக்கை!

சென்னை, மார்ச்.1-

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 (அ) வட்டச் செயலாளர் மு.மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

சென்னை மேற்கு மவாட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 112 (அ) வட்டத்தில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (1.3.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெறுகிறது.

நடைபெறும இடங்கள் : ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக அலுவலகம், புலியூர் 2வது சந்து, சிவன் கோவில் தெரு, முத்து தோட்டம், தயாள் நகர், சிவன் கோவில் தெரு, டிரஸ்ட்புரம் 7-வது தெரு ஆகிய இடங்களில் வட்ட கழக செயலாளர் மு.மோகன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், தேர்தல் பார்வையாளர் சைதை சாதிக் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

எனவே பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் ,கழக உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மு.மோகன் அறிக்கை விடுத்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பலகுரலரசு ‘மிசா’ முருகுபாண்டியன்
### மார்ச் 1 (2016)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் ‘உதயசூரியன் நாடக மன்ற’த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு “பலகுரலரசு” எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---


## முரசொலி உரிமை விளக்கம் படிவம் - 4 விதி - 8

| | |
|---|---|
| **பிரசுரிக்கும் இடம் -** | **முரசொலி அச்சகம், 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |
| **பிரசுர முறை -** | **நாளிதழ்** |
| **வெளியிடுபவர் & அச்சிடுபவர் -** | **கார்த்திகேயன் சண்முகசுந்தரம்** |
| **ஆசிரியர் பெயர் -** | **கார்த்திகேயன் சண்முகசுந்தரம்** |
| **இனம் -** | **இந்தியன்** |
| **முகவரி -** | **180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |
| **உரிமையாளர் பெயர்- மற்றும் முகவரி** | **முரசொலி அறக்கட்டளை 180, கோடம்பாக்கம், நெடுஞ்சாலை சென்னை - 600 034.** |

**மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்று நம்பிக்கையுடன் கூறுகிறேன்.**

**கார்த்திகேயன் சண்முகசுந்தரம்**
**(ஒப்பம்)**
**வெளியிடுபவர்**

**சென்னை**
**01.03.2026**